# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,073 — 1934 ம் ௵ ஆவணி௴ 17 ந் திகதி, வெள்ளிக்கிழமை.

## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பேலியகொடவில் புது கலவன் பாடசாலைக்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 377. குறிச்சி—பேலியகொட கங்கபொட.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | பறன்டறவத்த இறைவரி இலக்கம் 200, 201, 202, 203, 204 ன் பகுதிகள் | தோட்டம், 3 வாழை அடியும், 1 கமுகுவும், 1 தென்னையும், 1 கட்டிய கிணறும், 1 ஓட்டால் வேய்ந்த கட்டடப்பாடசாலையும், ஒரு தகரக் கற்கூசும் உள்ளது | ஆர். கே. அல்பொன்சோ, பேலியகொட கங்கபொட | 0 1 5·10 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1934 ம் ௵ புரட்டாதி மாசம் 18 ந் தேதியிலன்று காலை 9.30 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடமைகளினது தன்மையையும் அவ்வுடமைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1934 ம் ௵ ஆவணி௴ 6 ந் உ.

கார்ள் ஈ. ஆண்ட்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் சிறீ சுமங்கல ரோட்டு வடக்கு, கடற்கரைத் தெருச் சந்தியை அகலித்தற்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 360. குறிச்சி—டெசெஸ்திமு, களுத்துறை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின்பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | உவாட் நொ. 8 சுற்றுத்தெரு (இப்பொழுது சிறீ சுமங்கல ரோட் டென்று அழைக்கப்படும்), சோலைவரி இல. 197 ளின் பகுதி, பான்சாலவத்தை அல்லது குருவத்தை | தோட்டம் .. (வெண்நிலம்) | கொழும்பு மாநகரைச்சார்ந்த பீ. எம். பெரேரா | 0 0 1 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1934ம் ௵ புரட்டாதி மாசம் 15 ந் தேதியிலன்று காலை 10.30 மணிக்கு களுத்துறைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடமைகளினது தன்மையையும் அவ்வுடமைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

களுத்துறைக் கச்சேரி,
1934 ம் ௵ ஆவணி௴ 6 ந் உ.

ஜே. லைற்,
உதவி அரசாட்சி ஏசண்டு, களுத்துறை.

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் நாக்கியகாடு ஒழுங்கை அகட்டுகிறதாகிய பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 850. குறிச்சி—புங்குடுதீவு மேற்கு.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | கிரான்சி .. | 30 வயதுள்ள ஒரு பனைமரமும், 13 வாழைமரங்கள் கொண்ட தோட்டம் | (1) நயினாதீவு, கே. அய்யாதுரை, (2) புங்குடுதீவு, மேற்கு, கந்தசாமிகோவிலின் காரியகாரன் என். செல்லப்பா | 0 0 5 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1934 ம் ஹூ புரட்டாதி மாசம் 14 ௳ தேதியிலன்று 10 மணிக்கு ஊர்காவற்றுறை வாடிவீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படிக்கும் அக்காணியைப்பற்றிய உறுதிகளை கொண்டுவந்து காட்டும்படிக்கும் இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

யாட்பாணக் கச்சேரி,
1934 ம் ஹூ ஆவணிமீ 11 ௳.

ஃ. ஜெட்றிக்கோ,
வடமாகாண அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் மாவத்தவில் ஒரு பள்ளிக்கூடத்தின் நிலையத்திற்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லபடும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A. 275. குறிச்சி—வடமேன் மாகாணத்தில், குருனுக்கல் டிஸ்திரிக்கில், தம்பதெனியஹற்பத்துவில் உடப்பொலஒத்தொட்ட கோறளை மேற்கிலுள்ள மாவத்தை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | பெலபொல்வத்த .. | தென்னந்தோட்டம் .. | மாவத்தவைச்சேர்ந்த ஏ. எம். டிங்கிரிவண்டாவும், புஞ்சிவண்டாவும், கௌரவ பியரத்தன அவர்களும் | 0 2 19 |

எடுதுக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1934 ம் ஹூ (செப்ரம்பர்) புரட்டாதி மாசம் 10 ௳ தேதியிலன்று காலை 11 மணிக்கு குருனுக்கல் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

குருனுக்கல் கச்சேரி,
1934 ம் ஹூ (ஆகஸ்ட்) ஆவணிமீ 7 ௳.

ஸீ. ஹரிசன் ஜோன்ஸ்,
வடமேன் மாகாண அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கல்பொடகமவில் ஒரு பொதுக்கிணறு வெட்டுதல் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 269. குறிச்சி—வடமேன் மாகாணத்தில் குருனுக்கல் டிஸ்திரிக்கில், பொல்காவலைச் சுகாதார சங்க எல்லைகளுள் இருக்கும் கல்பொடகம (ஒரு பகுதி).

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | மீகஸ்கும்புற (694 ம் வரி இலக்கத்தின் ஒரு பாகம் | நெல்வயல் .. | கல்பொடகமவைச்சேர்ந்த எஸ். பீ உக்குவாவும் மறுபேரும் | 0 0 4·3 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல், அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1934 ம் ஹூ (செப்ரம்பர்) புரட்டாதி மாசம் 10 ௳ தேதியிலன்று காலை 11·30 மணிக்கு குருனுக்கல் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

குருனுக்கல் கச்சேரி,
1934 ம் ஹூ (ஆகஸ்ட்) ஆவணிமீ 7 ௳.

ஸீ. ஹரிசன்–ஜோன்ஸ்,
வடமேன் மாகாண அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7ம் பிரிவின் பிரகாரம் ஒரு கிராமச்சங்க ரேட்டிற்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 2,053 ம் இலக்கக் கடைசிக் கிராமப்படத்தின் 1 ம் அநுபந்தம்.
குறிச்சி—வடமேன் மாகாணத்தில், குருனுக்கல் டிஸ்திரிக்கில், கற்றுகம்பொல ஹற்பற்றுவில், கற்றுகம்பொல கோறளை தெற்கிலுள்ள டெனுகதெனிய.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 35 | — .. | ரேட்டு .. | மீகஹகொற்றுவவைச்சேர்ந்த ஆர். எம். பீறிஸ் ஸின்ஞேஅப்புகாமி அல்லது பீ. ஏ. றத்னுயக்க | 0 0 19 |
| 36 | — .. | ரேட்டு .. | ஷை .. .. | 0 0 22 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1934 ம் ௵ (செப்ரம்பர்) புரட்டாதி மாசம் 12 ௳ தேதியிலன்று காலை 10½ மணிக்கு குளியாப்பிட்டி வாடிவீட்டில் என் முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

குருநாக்கல் கச்சேரி,
1934 ம் ௵ (ஓகஸ்ட்) ஆவணிமீ 8 ௳.

என். ஈ. ஏர்ன்ஸ்ற்,
உதவி அரசாட்சி ஏசண்டு, குருநாக்கல் டிஸ்திறிக்.

---

## காணி நிர்ணய முன்னறிவித்தலைக் குறித்த விளம்பரம்.

1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்
நி. 863 (புத்தளம்).

இதனோடிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எவற்றிற்கேனும் அல்லது அவைகளின் எப் பங்குக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1934 ம் ௵ (ஆகஸ்ட்) ஆவணிமீ 17 ௳ தேதி தொடக்கம் மூன்று மாச காலத்திற்குள் கீழே கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக் காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1934 ம் ௵ (ஜனவரி) தைமீ 10 ௳ தேதி புத்தளம் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

ஏ. ஈ. கிறிஸ்தோபல்ஸ்,
உதவி அரசாட்சி ஏசண்டு,
புத்தளம்–சிலாபம் டிஸ்திறிக்குகள்.

குறிப்பு.—(*a*) இக்காணிகளைப்பற்றிய மறுவிபரங்கள் புத்தளம் உதவி அரசாட்சி ஏசண்டுவிடத்திலும் மவைகளின் படங்கள் அளவைக் கந்தோர்த் தலைவரிடமும் பெற்றுக் கொள்ளலாம்.

(*b*) இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அவ் வக் காணிகளுக்குள்ள உரிமை உரித்தாமென்பதை அறிந்து கொள்க.

குறித்த காணிகளின் விபரம்.

வடமேல் மாகாணம் புத்தளம் டிஸ்திறிக்கு, கல்பிட்டி டிவிசன் அக்கரைப்பற்று வடக்கு அல்லது மாம்புரியில் எரும்புக்குடல் என்னும் கிராமத்திலிருக்கும் பின்வரும் காணித்துண்டுகள் :—

பிரதமபடம் நி. 7,339.

| துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | ரூ. | ப. |
|---|---|---|---|---|
| 1 | எரும்புக்குடல் காடு அல்லது மயில் சந்திக் காடு .. .. | 2 | 3 | 24 |
| 2 | டிை .. .. | 8 | 2 | 28 |
| 4 | டிை .. .. | 97 | 2 | 6 |
| 5 | டிை .. .. | 1 | 2 | 11 |
| 6 | டிை .. .. | 6 | 1 | 32 |
| | .. | 117 | 0 | 21 |

எல்லைகளாவன : வடக்கு-முடிக்குரிய எரும்புக்குடல் காடும் பீ. வீ. என். முகம்மது மரைக்காயரால் உரித்தாடப்பட்ட முத்தன்சேனைத் தோட்டம் (பீ. பீ. 7,339 ல் 3 ம் துண்டு) காதர் சாகிபு மரைக்காயரால் உரித்தாடப்படும் முத்தன்சேனைத் தோட்டமும், ஆர். வீ. என். முகம்மது உரித்தாடும் முத்தன்சேனைத் தோட்டமும், எம். எஸ். எம். அசன் முகையிதீன் வாவா சாகிபு லெவ்வை உரித்தாடப்படும் லெவ்வை தோட்டமும், முடிக்குரிய எரும்புக்குடல் காடும், எம். எஸ். எம். அசன் முகையிதீன் வாவா சாகிபு லெவ்வை உரித்தாடப்படும் லெவ்வைத் தோட்டமும், முடிக்குரிய மயில்சந்திக்காடும் (ஏத்தாலையில் மூன்று சந்தானு மாதா கோவிலுக்குப் போகும் றோட்டு) முடிக்குரிய எரும்புக்குடல் காடும் ; கிழக்கு-ஏத்தாலை கிராம எல்லையும் சந்தான மாதா கோவிலிலிருந்து ஏத்தாலைக்குப் போகும் றோட்டும், ஏத்தாலை கிராமஎல்லையும் ; தெற்கு-முடிக்குரிய எரும்புக்குடல் காடும், சேகுக்கன்னியால் உரித்தாடப்படும் எரும்புக்குடல் சேனையும், முடிக்குரிய எரும்புக்குடல் காடும் ; மேற்கு-பெருங்கடல்.

---

## சுப்பிறீங் கோட்டு அறிவித்தல்.

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது : களுத்துறை நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங் கோட்டாரால் மேற்குப் பிரிவின் டிஸ்திறிக்டைச்சேர்ந்த கிறிமினல் வழக்கு விசாரணை, 1934 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3 ௳ திகதியாகிய திங்கட்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.—ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக் கடவர்கள்.

இங்ஙனம்,
சீ. எச். டபிள்யு. கன்னங்கற,
மேல்மாகாண பிஸ்காலுக்காக.

கொழும்பு பிஸ்கால் கந்தோர்,
1934 ம் ௵ ஓகஸ்ட்மீ 8 ௳.

---

## உத்தியோக சம்பந்தமில்லாதவரின் அறிவித்தல்.

களுத்துறை டிஸ்திறிக்கைச்சேர்ந்த பாணந்துறை தொடமுனை, வாதுபத்த மேற்கு, மா. வாதுவையில் குடியிருக்கும் முதலிபேருவே ஹேவாவசமே சந்திரபாண்டிகே ஸ்டனிஸ் லாவுஸ் பர்ணாந்து என்ற நான் இன்று துவக்கம் மூன்று மாதத்திற்குள் 1907 ம் ஆண்டு முதலாம் நம்பர் கட்டளைச் சட்டத்தின் 1 B அட்டவணையில் 2 ம் பிரமாணத்தின் பிரகாரம் பதிவுகாரியஸ்தர் அவர்களுக்கு என்னைச் சிங்களப் பாஷையில் வதுளை டிஸ்திறிக பிரசித்த நொத்தாரிசாக பிரவேசம்பண்ணுவிக்கவும் பேர் பதியும்படியும் விண்ணப்பம் செய்ய எண்ணியிருக்கிறேன்.

இங்ஙனம்,
எம். ஸ்ட்டனிஸ் லாவுஸ் பர்ணாந்து.

1934 ம் ௵ ஜூன்மீ 1 ௳.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.